**தலைப்பு 205 – பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்

பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2021 ஒக்தோபர் 15 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஒக்தோபர் 06 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென

முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான புரிதலை பெற்றுக்கொண்டேன்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

### 1.5 ஏனைய சட்ட மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்ட விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளது.

(ஆ) முன்னைய ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் விடுக்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது 02 மூலதன செலவின விடயங்களுக்காக தேவையான ரூபா 371,000 ஆன மொத்த நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டில் இறுதி வரை மொத்த ஏற்பாட்டில் ரூபா 188,253 ஆன 33 சதவீதம் முதல் 55 சதவீதம் வரையான நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | திணைக்களத்தை நடாத்திச் செல்லும் கட்டிடத்தை முழுமையாக திருத்தம் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதால் கட்டிடத்தின் சிறு திருத்த வேலைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் 2001 செலவின விடயத்தின் கீழ் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது<br><br>2020 ஆம் ஆண்டில் நாட்டில் காணப்பட்ட கொவிட் தொற்று நிலமை காரணமாக திட்டமிடப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகள் குறித்த பயிற்சி | ஒதுக்கீடு செய்த நிதிஏற்பாட்டை பயன்பாட்டிற்கு எடுக்க வேண்டும். |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | | நிறுவனங்கள் மூலம் நடாத்தப்படாமை அவற்றுக்காக உத்தியோகத்தர்களை அனுப்புவதில் ஆபத்தான நிலைமையொன்று காணப்பட்டதால் 2401 செலவினத் தலைப்பின் கீழ் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### 3.1.1 வருடந்த செயலாற்றல் அறிக்கை

2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வழிகாட்டி இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரியின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 07 செயலாற்றல் இலக்குகள் இனங்காணப்பட்ட செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளின் பெறுமதியாக 05 செயலாற்றல் குறிகாட்டிகள் மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்தன. அதில் 03 செயலாற்றல் குறிகாட்டிகளின் எதிர்பார்த்த விளைவுகள் உண்மையான பெறுபேறுகளின் சதவீதமாக உள்ளவாற விளைவுகளின் 50 சதவீதத்தை விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | 2020 ஆம் ஆண்டில் நிலையான வைப்புக்களுக்காக கிடைத்த வட்டி சதவீதம் குறைந்த அடிப்படையில் நம்பிக்கை பொறுப்புக்களின் வருமான நிலைமை குறைவாக இருந்தமையால் நம்பிக்கை பொறுப்பின் நோக்கங்களை எதிர்பார்த்த மட்டத்தில் நிறைவேற்றுவதற்கு சிக்கலாக இருந்தமை மற்றும் 2020 பூராகவும் காணப்பட்ட கொவிட் தொற்று நிலைமை காரணமாக அலுவலக செயற்பாடுகளை வழமையான முறையில் பேணிச்செல்ல முடியாமை காரணமாக செயலாற்றல் குறிகாட்டிகளின் உள்ளவாறான நிலைமை குறைவடைவதற்கு காரணமாக இருந்தன. | இனங்காணப்பட்ட செயலாற்றல் குறிகாட்டிகளில் எதிர்பார்த்த விளைவுகளின் சதவீதமாக உள்ளவாறான விளைவுகள் காண்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பொது நம்பிக்கையாளரின் அதிகாரம் மற்றும் செயற் பணிகளுக்கு மேலதிகமாக ஏனைய துறைகளில் பொது நம்பிக்கையாளரின் ஈடுபாடு கீழே காட்டப்பட்டுள்ள பிரகாரம் இருக்க வேண்டும் | உரிய செயற்பாடுகளை இனங்கண்டு எதிர்காலத்தில் செயலாற்றல் குறிகாட்டி களுக்கு உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும் | திணைக்களத்தின் செயற்பாடுகளை செயலாற்றல் குறிகாட்டிகளாக இனங்காணப்பட வேண்டும். |

- 1988 இன் 61 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தம் செய்யப்பட்ட நம்பிக்கை பொறுப்பாளர் கட்டளைச் சட்டத்தின் 10(அ) பிரிவின் பிரகாரம் தொழிலுக்காக வெளிநாடு சென்றேறார், வெளிநாட்டில் மரணித்தால் அவருக்காக கிடைக்கும் இழப்பீட்டுத் தொகை தங்கியிருப்போர் அல்லது அவரின் சட்டரீதியான வாரிசுகளுக்கு இடையே பகிர்தல் மற்றம் தொழிலுக்காக இலங்கையிலிருந்து வெளியேறும் இலங்கை பிரசை ஒருவர் சேவையில் இருக்கும் போது மரணிக்கும் சந்தர்ப்பமொன்றில் ஏதேனும் இழப்பீட்டுத் தொகை செலுத்தப்படும் நபர் ஒருவராயின் பொது நம்பிக்கையாளரிடம் பதிவு செய்தல்
- 1944 இன் 28 ஆம் இலக்க விஹாரைகள் இழப்பீட்டு கட்டளைச் சட்டத்தை செயற்படுத்தல்
- 1981 இன் 42 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட 1931 இன் பௌத்த விஹாரைகள் தேவால கட்டளைச்சட்டத்தின் கீழ் கையளிக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுதல்.

- 1931 இன் 28 ஆம் இலக்க விசேட சட்டங்களின் கீழ் ஐக்கிய பத்திரிகை கம்பனியின் பங்குகளை அரசிற்காக பொறுப்பேற்றிருத்தல்.

எனினும் மேற் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய துறைகள் தொடர்பில் பொது நம்பிக்கைப் பொறுப்பாளரின் தலையீடு பொது நம்பிக்கைப்

| | | | |
|---|---|---|---|
| | பொறுப்பினர் திணைக்களத்தின் செயலாற்றல் இலக்குகளாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நம்பிக்கை பொறுப்பு மற்றும் பூதல்களுக்குரிய பொது நம்பிக்கை பொறுப்பாளர் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறவிடப்பட்ட மூலதனம் மற்றும் மூலதன வருமானக் கட்டணங்கள் மற்றும் ஏனைய கட்டணங்களாக ரூபா 6,800,000 ஆன வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 10,726,026 ஆன வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பீடு செய்வதில் பலவீனமொன்று அவதானிக்கப்பட்டதுடன் வருடாந்த செயலாற்றலை குறிப்பிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் புதிய பூதல்களை நிறுவுதல், விஹாரை இழப்பீடு, வெளிநாட்டு இழப்பீட்டு தொகை எதிர்வரும் காலங்களுக்கு கிடைத்தல் மற்றும் வட்டி வீதங்களில் மாற்றங்கள் தொடர்பாக சரியான எதிர்வுகூறலொன்றை மேற்கொள்வதில் உள்ள சிக்கலின் பேரில் வருமான மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட மதிப்பீட்டு செய்யப்பட்ட பெறுமதிகளுக்கு இடையே விலகல் ஏற்பட்டுள்ளன. | வருடாந்த செயலாற்றல் கூற்றில் வருமான சேகரிப்பின் செயலாற்றலை காண்பிக்க வேண்டும். |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

---------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | --------------------------------------------------- | ----------------------------------------- | --------------- |
| (அ) | 2016 மார்ச் 1 ஆந் திகதிய 5/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.1.2 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு அந்த அறிக்கை ஆண்டின் மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2020 ஆம் ஆண்டிற்குரிய அறிக்கை | செயற்படாததன் பேரில் குறித்த திகதிகளில் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ள முடியாதிருந்தது. | சுற்றறிக்கை பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்காய்வு திகதியான 2021 ஒக்தோபர் 06 ஆந் திகதி வரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. 2019 ஆம் ஆண்டிற்குரிய அறிக்கை கணக்காய்வு திகதியான 2020 யூலை 06 ஆந் திகதி வரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் 11 தோட்டங்களுக்குரிய பொருள் மெய்மையாய்வொன்று மேற்கொள்ளப்படா திருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | நீதி அமைச்சின் மூலம் 2019 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த 03 வாகனஙகளின் உரித்து திணைக்களத்திற்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதும் அவ்வாகனங்களின் பெறுமதி நிதியல்லாத சொத்துக்களின் கீழ் நிதிக் கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் இவ்வாகனங்களின் உரித்து தீர்வு செய்யப்பட்டிருந்ததுடன் தற்போது பதிவு பொது நம்பிக்கையாளர் திணைக்களத்தின் பெயரில் காணப்படுகின்றது.<br><br>நீதி அமைச்சின் மூலம் வழங்கல் சான்றிதழ் வழங்காமை அடிப்படையில் அவற்றின் பெறுமதி நிதியல்லாத சொத்துக்களின் கீழ் கணக்குகள் மூலம் வெளிப்படுத்துவதற்கு முடியாமல் இருந்ததுடன் உரிய வகையில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | திணைக்களத்டமுள்ள வாகனங்களின் பெறுமதி கணக்குகள் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும் |

**3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் செயற்படுகின்ற செயற்படாத மற்றும் மூடப்பட்டுள்ள பூதல்கள் தொடர்பான தகவல்கள் திணைக்களத்தினால் நாளது வரையாக்கப் படாதிருந்ததுடன் 2019 திசெம்பர் 09 ஆந் திகதிய PT/10/தகவல்/2019 ஆம் இலக்க பொது நம்பிக்கையாளரின் கடிதத்தின் மூலம் செயற்பாட்டில் உள்ள பூதல்களின் எண்ணிக்கை 110 என கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூதல்களின் எண்ணிக்கை 143 எனவும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூதல்களின் எண்ணிக்கை 151 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. | தற்போது தகவல்கள் நாளது வரையாக்கப்பட்டு வருகின்றன. | குறித்த தகவல்களை நாளது வரையாக பேணிச் செல்லல் வேண்டும் |
| (ஆ) 1922 இன் 01 ஆம் இலக்க பொது நம்பிக்கையாளர் கட்டளைச் சட்டத்தின் 47(1) பிரிவின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந் நம்பிக்கை பொறுப்பு / பூதல் இறிக் கணக்கு கணக்காய்வு திகதியான 2021 05 ஆந் திகதி கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை.விஹாரைகள் இழப்பீட்டு கட்டளைச் சட்டத்தை செயற்படுத்தல் | நாட்டில் காணப்படும் கொவிட் நிலைமை காரணமாக உத்தியோகத்தர்கள் சேவைக்கு அறிக்கையிடல் பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு இணங்க வேண்டியுள்ளதால் கொவிட் நிலைமை குறைவடைந்து அலுவலக செயற்பாடுகள் உரிய நிலைக்கு மாறியவுடன் ஒரு மாதத்திற்குள் இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கலாம் | கணக்காண்டிற்குரிய இறுதிக் கணக்குகளுக்குரிய இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

## 4. நிலைபேறான அபிவிருத்தி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ‘‘நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் 2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரலின்’’ பிரகாரம் அனைத்து அரசாங்க நிறுவனங்களினாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்ததுடன் மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தினால் தமது நோக்கெல்லையின் கீழ் கொண்டு வரப்படுகின்ற செயற்பாடுகள் சம்பந்தமாக தொடர்புபட்ட அபிவிருத்தி குறிக்கோள்கள், இலக்குகள், மற்றும் அந்த இலக்குகளை அடைந்து கொள்ள வேண்டிய மைய நிலைகளும் இலக்குகளின் அடிப்படையில் அடைந்து கொள்ளலை மதிப்பீடு செய்வதற்கான குறிகாட்டிகளும் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டிற்காக நிலைபேறான அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்படாமல் இருந்ததுடன் 2021 ஆம் ஆண்டிற்காக நிலைபேறான அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்படுவதுடன் அதனை எதிர்காலத்தில் விரைவில் தருவதாகவும் குறிப்பிடப்பிடுகின்றேன். | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் இனங்காணப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 5. மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 87 ஆக இருந்த போதும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளபடியான பதவியணியினர், 69 ஆகும். சிரேஷ்ட மட்டத்தில் 01 வெற்றிடமும் மூன்றாம் மட்டத்தில் 01 வெற்றிடமும் இரண்டாம் மட்டத்தில் 15 வெற்றிடங்களும் ஆரம்ப மட்டத்தில் ஒரு வெற்றிடமாக 18 உத்தியோகத்தர்கள் வெற்றிடமாக காணப்பட்டனர். | திணைக்களத்தில் தற்போது காணப்படும் 18 வெற்றிடங்கள் தொடர்பாக நிகழ்நிலை ஊடாக மாதாந்தம் நீதி அமைச்சின் செயலாளருக்கு மூன்று ாதங்களுக்கு ஒருமுறை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கும் அறிக்கையிடப்படுகின்றது. இது தொடர்பாக ஒன்றிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிக்கையிட்ட போதும் | சேவைத் தேவைப்பாடு கருத்திற் கொள்ளப்பட்டு வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

ஆட்சேர்ப்பு செய்யப்படும் வரை ஊழியர்களை வழங்க முடியதெனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. பயிலுனர் பட்டதாரிகளை பெற்றுக்கொள்வது மற்றும் ஆரம்ப தரத்திலான ஊழியர்களை பெற்றுக்கொள்வதற்காக வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. வெற்றிடமாக காணப்படும் நிர்வாக உத்தியோகத்தர் பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதுடன் அவரின் காலம் தற்போது முடிவடைந்துள்ளதுடன் சேவை நீடிப்பு அங்கீகரிக்கப்படவில்லை.